1980 பிப்ரவரி 12]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, (மணி யடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என் அனுமதி இல்லாமல் எதையும் பேசக்கூடாது. பேசினாலும் நடவடிக்கைக் குறிப்பில் வராது என்று உத்தரவு இட்டிருக்கிறேன். அமருங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பரவலாக மின்சாரம், டீசல் தட்டுப்பாடு இருக்கிறது. அதுபற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை..... (மணி யடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே வெளிநடப்புச் செய்து அதை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே உட்காருங்கள். திரு. லத்தீப்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள். ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படிப்பதற்கு முன்னால், இந்த மாதிரி இன்னின்ன உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் மறுக்கப்படுகிறது என்று....(மணியடிக்கப்பட்டது.)

(முற்பகல் 9.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நான் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அறிக்கை வைத்தபிறகு இந்தப் பிரச்னையை இந்த உறுப்பினர்கள் எழுப்பினார்கள் என்று நான் சொல்வேன்.

## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### ஆ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.